ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 1881/43 - 2014 සැප්තැම්බර් 26 වැනි සිකුරාදා - 2014.09.26
*1881/43 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

இறப்பர் வளர்த்தல், மற்றும் உற்பத்தித் தொழில்

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் அந்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றியமைப்பதற்கு இறப்பர் வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பது அக்கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல்.

**டபிள்யு. ஜே. எல். யு. விஜயவீர,**
செயலாளர்,
தொழில், தொழில் உறவுகள் அமைச்சு.

தொழிற் செயலகம்
கொழும்பு 05
2014.09.23.

**அட்டவணை**

1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய 1469/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலினால் இறுதியாக வேறுபடுத்தப்பட்டுள்ள இறப்பர் வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையின் தீர்மானங்களின் நாளாந்த நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள வீதத்தின் கீழுள்ள பாகம் II ஆனது பின்வரும் புதிய பாகத்தை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படும்.

**II ஆம் பாகம்**

நாளாந்த நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்
வேலையாள் - ரூபா 405.00

10-491

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.